26—

சமுதாயக்கூடம்

***41406—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, கல்லாவியிலுள்ள வேடியப்பன் கோயிலுக்கு அறநிலையத் துறை மூலம் சமுதாயக்கூடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, கல்லாவியிலுள்ள அருள்மிகு வேடியப்பன் திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாததால் அத்திருக்கோயிலுக்கு அறநிலையத் துறையால் சமுதாயக்கூடம் கட்டும் முன்மொழிவுகள் ஏதுமில்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை. வினா எண் 27, திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

27—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

*** 36452—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபிசெட்டிப்பாளையம் தொகுதியில் கூகலூர் பேரூராட்சியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்டதாகத் தரம் உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2004 ஜூலை 27]

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். கோபிசெட்டிப்பாளையம் தொகுதியில் கூகனூர் பேரூராட்சியில், கூகனூர் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 28, திரு. மா. இராஜசேகர், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.*

28—

பெண்கள் முன்னேற்றத் திட்டம்

***7376—திரு. மா. இராஜசேகர்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் பெண்கள் முன்னேற்றத்திற்காகப் புதியதாகத் திட்டம் ஏதும் தொடங்கப்படுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தாயுள்ளமும், கருணையுள்ளமும் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பெண்களின் முன்னேற்றத்திற்காக சுய உதவிக் குழுக்களின் வாயிலாக பல செயல் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்கள். எனவே, இராஜபாளையம் பெண்கள் முன்னேற்றத்திற்காக என்று மட்டும் புதியதாகத் திட்டம் எதுவும் தொடங்கவேண்டியதில்லை. மாநிலம் முழுமைக்கும் புதிய திட்டங்கள் தொடங்கப்படும்போது, அத்திட்டங்களின் பயன்கள் இராஜபாளையம் பெண்களுக்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. இராஜசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியில் எத்தனை மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயங்குகின்றன என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.*